ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2455/06 - 2025 සැප්තැම්බර් මස 22 වැනි සඳුදා - 2025.09.22

2455/06 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், PV 7412 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இல. 502, பேராதெனிய வீதி, கண்டியில் அமைந்துள்ளதுமான " அமெரிக்கன் கொலேஜ் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்" தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதும் அதன் சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதுமான பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்றதாக "அமெரிக்கன் கொலேஜ் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டின்" இனை உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனைப் பட்டம் அளிக்கின்ற நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கின்றேன்.

அட்டவணை I

நிபந்தனைகள்

1. (இதனகத்துப் பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமெரிக்கன் கொலேஜ் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன், உளவியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்;

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) பொது ஆங்கிலத்தில் சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. இந்நிறுவனமானது இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை இல. 502, பேராதெனிய வீதி, கண்டியில் மாத்திரமே நடாத்துதல் வேண்டும்.

3. இந்நிறுவனமானது இக்கட்டளையின் வெளியீட்டுத் திகதியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீளாய்வொன்றுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| உளவியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ சிறப்பு (உளவியல்) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சர்.

கொழும்பு,
2025 செத்தெம்பர் 22.

EOG 09 - 0209